ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

कालस्य चेत्कुटिलता ननु कालकाल
काटाक्षकोणवलनादपरास्ति रक्षा ।
तन्नाथ ! नो ध्रुवमन्यगतीननेहो-
दोषार्दिताननुगृहाण कृपार्द्रदृष्ट्या ॥

பகவானே! உம்மால் அருளப்பட்ட பிரமாணங்களை அவமானம்செய்துவிட்டுத், தம் புத்திப் பிரமாணத்தைமாத்திரம் அவலம்பிக்கின்ற தற்காலத்தியப் பிராம்மண ஸமூகத்தை ஏன்சிக்ஷிக்கக் கருணைபுரியவில்லை. நமது மதத்தை அழிப்பதற்கு அடிப்படையாயுள்ள பிராம்மணருக்கு நல்ல அறிவு விவேகம் எப்போதுகொடுப்பாய். காலத்தின் மஹிமையால்இவர்களுக்குப் "பூமிதேவர்"என்ற பெயர்போய் "பூமி அஸுரர்"என்ற பெயர்கூடவழங்கிவிடலாம் என்று தோன்றுகிறதே? தானுங் கெட்டுப் பிறரையும் கெடும்படி செய்வதிலிருந்துஇவர்களைத் தடுப்பது உமக்கும் ஸாத்தியமில்லையா? இவர்களிடம்முதலில்மதத்வேஷம் வலுத்துவிட்டதினாலல்லவா நம்தேசத்துக்கு நற் குணம் நற்செய்கை,இவை ஒன்றுவது இல்லவேயில்லை.தம் குற்றங்களை விலக்கிக்கொண்ட பிறகு அல்லவா பிறரைப்பற்றிக் கவனிக்கவேண்டும். பிராம்மணர்களை மற்றவர்கள யாவரும் ஒன்றுசேர்ந்துகொண்டு வாய்கூசாமல் வைதுவருவதும் அவர்களுக்கு வேணும். அப்படியிருந்தும் இன்னமும் இப் பிராம்மணர்கள் திருந்தமாட்டார்கள். பிராம்மணர்கள் தம் குற்றங்களைத் திருத்திக்கொள்ளாதவரையில் க்ஷேமம் ஒருபோதுமில்லை என்பது நிச்சயம். சிலர் தெரியாமலே குற்றவாளிகளாகவிருக்கிறார்கள். சிலர் மதத்தின் மஹிமையை அறிந்தே அதை அலக்ஷ்யம் செய்கிறார்கள். இனிமேலாவது இவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்களா? மதத்தில் திட நம்பிக்கை வைப்பார்களா? மதத்வேஷிகளை வெறுப்பார்களா? தாய் பாஷையை ஆதரிப்பார்களா? நாஸ்திக்யம் பேசாமலிருப்பார்களா? தார்மிக ஸ்வாராஜ்யம் பெறுவார்களா? ஓ! பிராம்மணர்களே! கண்விழியுங்கள்! பகவானுடைய பிரஸாதத்தால் ஸ்வ தர்மத்தைக் காப்பாற்ற முன் வாருங்கள். இதுதான் க்ஷேமம். சுபம்.

V. J. S.

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸஸ்ரு கார்த்திகைமீ உவ

"நம் தேச க்ஷேமோபாயம்."

ஆஸ்திக மஹாஜனங்களே !

பாரதகண்ட வாஸிகளாகிய நம்மவருக்கு எல்லா விஷயங்களிலும் பலம் குறைந்துவிட்டதனுல், மேன்மேலும் அனேக ஆபத்துக்கள் தோன்றினவாறுகவே இருக்கின்றன. இப்போது நாம் நம்முடைய கஷ்டதெசையை நன்கு உணர்ந்துகொண்டோமாஞலும், அதை விலக்கிக்கொள்வதற்கு உண்மை உபாயத்தை உணர்ந்தோமில்லே. கஷ்டம் வந்ததற்குக் காரணத்தையும் கண்டுகொண்டோமில்லே. "இவ்வளவு கஷ்டங்களையும் வரவழைத்துக் கொள்வதற்காக நாம்பிரவிருத்தித்தோமா? எல்லாம் ஈசன்செயல்" என்று வேதாந்தோபதேசம் செய்வது சரியானதல்ல. நம்முடைய அவிவேகமே இவ்வளவு கஷ்டங்களுக்கும் காரணமாகும்.

நமது நாட்டிலுள்ள எல்லா கக்ஷிகளும், ஸமாஜங்களும், "அடிமைத்தனம் விலகி உயர்ந்த ஆண்மக்களாக நாம் விளங்க வேண்டும்" என்பதைக் குறித்தே சுமார் 45வருஷகாலமாக சிரமப்பட்டுக்கொண்டுவருகின்றனவென்பது பிரஸித்தம். ஆனுல் இவர்களுடைய மனோரதம்பூர்த்தியடையாமலிருப்பதுமன்றி அடிமைத்தனம் அதிகரிக்கவும் ஆரம்பித்துவிட்டது. இதன் காரணத்தை ஒருவரும் ஆலோசிக்கவே இல்லே. தேசீயத்தலைவர்கள் மேதாவிகளாயினும், அகாரணத்தைக் காரணமாகவும், அநுவச்யத்தை அவச்யமாகவும், அஸத்யத்தை ஸத்யமாகவும், பிரமைகொண்டு ஏமாந்து நிற்கிருர்கள்.

"ஹிந்துமதத்தையே அடியோடு ஒழித்தால்தான் இந்தியா க்ஷேமம் அடையும்" என்று தேசீயத்தலைவர்கள் மதத்தைத் தாக்கிகொல்லுகிருர்கள். அரசாங்கத்துடன் போர்புரிய கிளம்பிய

தேசிய காங்கிரஸ் யுத்தக்கப்பல், மதவாதிகளுடன் போர்புரிந்து வருகின்றது. குபீல் குபீலென்று வெடிகுண்டுகள் வைதிகமதத்தின்மீது விழுந்த வண்ணமாகவே இருக்கின்றன. இந்தக் கப்பலின் சுங்கானைத் திருப்பினவர் மஹா மேதாவியென்றே என் அபிப்பிராயம்.

நமது மதமோ அவ்வளவு குண்டுகளால் எதிர்க்கப்பட்டும், இதுவரையில் அசையவே இல்லை. காங்கிரஸ் கக்ஷியினருக்கு "மதம் அழிந்தாலும், கவலையில்லை. எப்படியாவது இந்தியாவிற்கு ஸ்வதந்திரம் ஏற்படவேண்டும்." என்று பேராசை. இந்தியா காந்தியாகவானால், காங்கிரஸ் மதம், ஹிந்துமதமென்று ஒப்பிவிடலாம். உளவன் இல்லாமல் திருட்டு ஏற்படுவதில்லை என்பதுபோல் ஹிந்து மதத் திருடர்களுக்கு உளவனாயிருப்பது பிராம்மணர்களே.

ஆசார சீர்திருத்தத்தில், காங்கிரஸ் மஹாஸபை இதுவரையில் தலையிட்டதில்லை. இப்போது தலையிட ஆரம்பித்துவிட்டது.

இவர்களுடைய வேலை வெகு விநோதமாகத் தோன்றுகிறது. "ஜாதிபேதம் இருக்கக்கூடாது. பழைய வேதசாஸ்திரங்களை எறிந்துவிட்டுப் புதியசாஸ்திரங்களை இயற்றிக்கொள்ளவேண்டும்" என்று கூறுமிவர்களிடம் தேசபக்தி என்பது எந்த அர்த்தத்தில் ஏற்பட்டதோ? தெரியவில்லை. தேசீய புராதன தர்மங்களை வெறுட்டுகின்ற தேசபக்தர்களிடம் தேசீய மதானுராகம் நிஷ்பலமன்றோ? தேசீய மதத்தில் குற்றமேதாவது ஒன்று இரண்டு இருந்தபோதிலும் அதை விலக்கிக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்து பரிபாலனம் பண்ணுகிறவர்களல்லவா தேசபக்தர்களாவர்,

சிலர் சொல்லுகிறார்கள்:—

தேசீயம்என்பது மதமல்லவென்று. அங்ஙனமாயின்மதத்தை அழிப்பது தேசீயமாகுமா? மதத்தோடு தேசீயமிதுவரையில் கலக்காமல் பிரிந்துவிட்டதால் தான் இவ்வளவு துன்பங்களும் நமக்கேற்பட்டிருக்கின்றன. மதமும் தேசீயமும் ஒன்றுசேர்ந்தால் உண்டு சுகவாழ்வு. இன்றேல் பரதேசி வாழ்வுதான். இந்த வாழ்வை விரும்பினால், பரதேசிகளை ஏன் நிந்திக்கவேண்டும்?

ஹிந்துக்களின் ஒற்றுமைக்கு மதம் பிரதிபந்தகம் என்று செல்வது தப்பு.

மதமோங்கிவளர்ந்த காலத்தில், ஸமூஹ ஒற்றுமை இல்லையா? அக்காலத்தில், ஹிந்து அரசர்களுக்கு யுத்தத்தில் ஒற்றுமையுடன் சண்டையிட்டுச் சகாயம்செய்யவில்லையா? ஹிந்து அரசர்களுடைய ஸேனையில் பிராம்மணர், அப்பிராம்மணர், ஸங்கரர், அநுலோமர், பிரதிலோமர். முதலிய பலவகை மனிதரும் கலந்துகொள்ள வில்லையா? அவர்களுக்கு ஜாதிபேதம் முதலியவற்றால் ஏதாவது ஒற்றுமைக்குறைவு உண்டாயிற்றென்று சொல்லமுடியுமா? ஆகையால் ஜாதிவேற்றுமை நம் உயர்வுக்குப் பிரதிபந்தகமல்ல. மத நம்பிக்கை இல்லாமலிருப்பதுதான் பிரதிபந்தகம்.

இங்கு அர்த்தசாஸ்திரம் கூறுவதாவது

धार्मिकं पालनपरं सम्यक्परपुरंजयम् ।
राजानमभिमन्यन्ते विपरीतं त्यजन्ति हि ॥

என்று சத்துருக்களை ஜெயிப்பதும், பிரஜைகளைப் பரிபாலிப்பதும், தர்மாதீனமாயிருக்கவேண்டும் அதார்மிகமாகவுள்ள அரசர்களிடம் தனது பிரஜைகளுக்கே அதிருப்தி ஏற்படும். ஆகவே எல்லா ஜனங்களுக்கும் தர்மத்தின் மூலமாக ஒற்றுமை ஏற்படலாமேயன்றி அதர்மமூலமாகவல்ல வென்பது காமந்தகாசாரியர் அபிப்பிராயம்.

ஸ்ரீ ராகவன் அவதார புருஷராயிருந்தாலும், பல வானர ஸேனைகளுடைய ஒற்றுமையைத் தர்மமூலமாகவே அடைந்து சத்ருவைக் கொன்றார் என்பது உலகப்ரஸித்தம். ஒருவரிடத்திலோ, ஒரு ஸபையிலோ, யாவருக்கும் ,விரோதபாவமில்லாமல் ஒற்றுமை அவச்யமானால் விசுவாஸம் வேண்டும். அது தர்மத்வேஷியாயிருந்தால் அதனிடம் விசுவாஸம் ஒருவருக்கும் உண்டாகாது. ஆகவே யாவருக்கும் விசுவாஸம் ஏற்படும் வண்ணம் காங்கிரஸ் ஸபை நடந்துகொண்டால், எளிதில் காரியஸித்தி ஏற்படும். இன்றேல் இப்படித் தான் சீரழியவேண்டும்.

வியாஸபகவான் சொல்கிறார்:—

ऊर्ध्वबाहुर्विरौम्येषः न च कश्चिच्छृणोति मां ।
धर्मादर्थश्च कामश्च सकिमर्थं न सेव्यते ॥

ஆதலால் தேசியத் தலைவர்களுக்கு மதத்வேஷம் விலகி பிரமாண வரம்பு மீறாமலிருக்கும்படியான நற்புத்தியைப் பகவான் கொடுத்து நம்மையும் பாதுகாப்பாராக.

V.J.S.

ஆங்கீரஸ ௵ கன்னி மீ௴ உ௯ஸ்ரீ பௌர்ணமி சுக்கிரவாரம் 14—10—32உயில் மகா-ள-ள-ஸ்ரீ அட்வோகேட் கணபதி அய்யரவர்களின் அக்கிராசனத்தில் மதுரையில் கல்யாணமண்டபத்தில் கூடிய பெரிய பொதுக்கூட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட

தமிழ் நாட்டு ஆகம ஸபை,

ஒப்பந்த கொள்கைகளும் நிபந்தனைகளும்.

1. தென்னிந்தியாவில் தமிழ் ஜில்லாக்கள் கூடிய தமிழ் நாட்டில் ஒரு பிரதான தலைமை ஆகம சபையேற்படுத்துகிறது. அதற்குத் தலைமையான இடம் மதுரையில் வைத்து சகலகாரியங்களையும் நடத்தவேண்டியது.

2. மேற்படி பிரதான தலைமை ஆகம சபைக்கு உதவியாகவும் அத்துடன் ஒத்து உழைத்து வேண்டிய காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும் தமிழ்நாட்டில் அனேகம் நகரங்களிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் கிளை ஆகம சபைகள் அல்லது சம்பந்த ஆகம சபைகள் ஏற்படுத்தவேண்டியது.

பொதுவிதிகள்.

3. ஆகம சபைகளினுடைய நோக்கங்களாவன.—

(1) சகல ஆலயங்களினுடைய ஆகமங்களையும் தந்திரங்களையும் கொள்கைகளையும் நீடித்த வழக்கங்களையும் படித்து ஆராய்ச்சி செய்தும் உபந்நியாசங்கள் செய்து வெளியிட்டும் பத்திரிகைகள் மூலம் பிரசுரஞ் செய்தும் யாவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு எங்கும்பரவும்படிக்கும் செய்யவேண்டியது.

(2) வேத ஆகம சாஸ்திரங்கள் மந்திர தந்திர சாஸ்திரங்கள் ஸ்மிருதி இதிஹாச புராணங்கள் மதாசார்யார்களுடைய கிரந்தங்கள் ஸ்தல புராணங்கள் முதலாகிய இந்துமத சம்பந்தமான புஸ்தகங்களையும் ஏட்டுப் பிரதிகளையும் சேகரித்து புஸ்தகசாலைகள் ஏற்படுத்தவேண்டியது.

(3) வேதாகம சாஸ்திர முறைப்படிக்கு ஆகம பாடசாலைகள் ஏற்படுத்தி நடத்தவேண்டியது.

(4) வேதாகம சாஸ்திரங்களை அனுசரித்தும் நீடித்த பரம்பரை வழக்கங்களையும் கொள்கைகளையும் அனுசரித்தும் இந்துமத ஆலயங்களை குறைவின்றி பாதுகாத்துவரவேண்டியது.

(5) இந்துமத ஆலயங்களினுடைய குறைவுகளை அதிகாரிகளிடத்திலும் மற்றவர்களிடத்திலும் வேண்டிய சமயங்களில் கவர்ன்மெண்டாரிடத்திலும் தெரியப்படுத்தி அந்தக் குறைவுகளை நிவர்த்தி செய்யவேண்டியது.

(6) மேலே 5-வது ஷரத்தில் கண்டிருக்கிறகுறைவுகளை அதில் கண்டிருக்கிற வழிப்படிக்கு நிவர்த்தி செய்யமுடியாமலும் சீவில் கிரிமினல் கோர்ட்டுகள் மூலம் நிவர்த்தி செய்யக்கூடியதாகவும் இருந்தால் அந்தந்த சபையார்கள் குறிப்பிடுகிற சபை உத்தியோகஸ்தர்கள் மூலம் சீவில் கிரிமினல் வகையரு கோர்ட்டுகளில் அந்தந்த சபை பேரால் நடவடிக்கைகள் நடத்தி அந்த குறைவுகளை நிவர்த்தி செய்யவேண்டியது.

(7) இந்து ஆலயங்களுக்கு ஏற்படுத்துகிற கமிட்டி மெம்பர்கள் டிரஸ்டிகள் இவர்களில் யாராவது தகுதியுள்ளவர்களாக இல்லாத பக்ஷத்தில் அவர்கள் நடத்திவருகிற ஆலயங்களுக்கும் நீடித்த வழக்கங்களுக்கும் பாதகமான காரியங்களை அவர்கள் நடத்திவந்தாலும் மேலே 5, 6-வது ஷரத்துகளில் கண்டிருக்கிறபடிக்கு ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் நடத்தி அவர்களை அந்த ஸ்தானங்களிலிருந்து விலக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

( ) மேலேகண்டிருக்கிற காரியங்களுக்காக வேண்டிய பொருளுதவிகளையும் மனுஷ உதவிகளையும் தேடி சேகரிக்கவும் ஸ்தாவர சங்கம சொத்துக்கள் வாங்கவும் விற்கவும் குத்தகை வாங்கவும் அவைகள் ஸம்பந்தமாக விவகாரங்களேற்பட்டால் நடத்தவும் சபை நோக்கங்களுக்கும்.காரியங்களுக்கும் வேண்டிய சிலவுகளை சபையார்கள் நேரிலாவது நிர்வாக கமிட்டிகள் மூலமாவது திட்டம்செய்து செலவிடவும் மற்றும் ஷை நோக்கங்களை நடத்தவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டியது.

(9) வேத ஆகம சாஸ்திர அனுஷ்டானமுறைகளையும்நீடித்த வழக்கங்களையும் அனுசரித்தும் அவைகளுக்கு பாதகமன்னியிலும் எவ்வளவு மட்டிலும் தமிழ்நாட்டிலுள்ள இதர சபைகளோடு

கூடி ஒத்துழைக்கமுடியுமோ அதுவரையில் இந்த ஆகமசபைகளின் நோக்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒத்து உழைக்கலாம்.

(10) பிரதானதலைமை சபையார்கள் ஒவ்வொருவருஷத்திலும் மற்ற கிளை சபை அங்கத்தினர்களையும் சம்பந்தசபை அங்கத்தினர் களையும் சேர்த்துவைத்து ஒரு மகாநாடு கூடி பொதுவான காரி யங்களுககு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டியது.

4. கிளை ஆகம சபைகளும் பிரதான ஆகம சபையின் செலவு களுக்காக ஒவ்வொரு மாதத்திலும் அந்தந்த மாதத்து வரும்படி யில் நாலிலொருபாகம் பிரதானசபைக்குசெலுத்திவரவேண்டியது.

5. (1) வேத ஆகமசாஸ்திரங்களையும் ஸ்மிருதிகளையும் அனுஷ் டான முறைப்படிக்கு நம்புகிற ஸகல இந்துக்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர் இதில் அங்கத்தினராகச் சேரலாம். ஆனால் நிர்வாக சபையார் யுக்தம்போல் ஒருவரை சேர்க்க மறுதளித்துவிடலாம்.

(2) சபையின் நோக்கங்களுக்கு விரோதமாக நடக்கிற அங் கத்தினரைப்பொதுக்கூட்டத்தார் எந்தசமயத்திலும்சபையினின்று விலக்கிவிடலாம்.

6. மேலே கண்டிருக்கிற ஆகமசபைகள் ஒவ்வொன்றிலும் ஒரு "ஆகம பண்டித வித்வான் கோஷ்டி"(பரிஷத்து)யேற்படுத்தி அதில் வேதஆகம சாஸ்திர மந்திர தந்திர புராண ஆகமப்படிப்பும் கௌரவமுள்ள தகுந்த பண்டிதர்களையும் வித்வான்களையும் சேர்க் கலாம். அப்படிச் சேர்க்கப்படுகிறவர்கள் யாதொரு சந்தாவும் செலுத்தவேண்டியதில்லை. ஆனால் அங்கத்தினர்களாகவே சேர்க் கப்படுவார்கள். அவர்களுக்கு திரவ்ய பிரயோஜனம் செய்ய வேண்டுமானால் அவர்கள் சபைக்கு செய்திருக்கிற உதவிக்குத் தக்கவாறு அந்தந்த சபை பொதுக்கூட்டத்தின் சம்மதத்தின் பேரில் செய்யலாம்.

7. "ஆகமபண்டித வித்வத்கோஷ்டி"யில் சேர்க்கவேண் டியவர்களை ஒவ்வொரு வருஷத்திலும் பொதுக் கூட்டத்திலாவது நிர்வாக சபையிலாவது சேர்க்கலாம். ஆனால் நிர்வாக சபையில் சேர்க்கிறவரை பொதுச்சபைக் கூட்டத்தார் விலக்கலாம்.

8. ஆலயத்தின் சம்பந்தமாக வேதாகம சாஸ்திரங்களில் ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டாலும் ஏதாவது விஷயங்கள்

தெரியவேண்டியதாயிருந்தாலும் காரியதர்சி மூலம் மேலே கண்டிருக்கிற பண்டித வித்வான் கோஷ்டி பரிஷத்தின் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளலாம்.

9. ஷை சபைகளில் விசேஷ காரியங்கள் பார்க்கிறவர்களுக்கு வேலைக்குத்தகுந்த திரவிய பிரயோஜநம் திட்டம் செய்து கொடுக்கிறதைத்தவிர மற்றவர்களுக்கும் சபை உத்தியோகஸ்தர்களுக்கும் திரவிய பிரயோஜனம் செய்யக்கூடாது. ஆனால் சபை உத்தியோகஸ்தர்கள் வெளியூருக்குப் போகும்போது நேரிடும் செலவை சபையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். சிப்பந்தி சம்பளம் முதலான நடப்புச் செலவுகளை காரியதரிசி யுக்தம் போல் நிர்வாக சபையாரை அனுசரித்துச் செய்யவேண்டியது.

10. மேலே கண்டிருக்கிற எல்லா ஆகம சபைகளிலும் வரவு செலவுகளுக்கு சரியான கணக்குப்புஸ்தகங்களும் வவுச்சர்களும் ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டியது. பிரதான ஆகம சபை காரியதரிசிகள் அவைகளை எப்பவும் பார்வையிடலாம். அந்த வரவு செலவுகளை ஒவ்வொரு வருஷமும் அந்தந்த பொது சபையார் நியமிக்கிற ஒரு ஆடிட்டர் (கணக்கு சோதனைதார்) மூலம் பரிசோதனை செய்து அவர் செய்கிற ரிப்போர்ட்டை பொதுக்கூட்டத்தார்கவனிக்கவேண்டியது. அந்தரிப்போர்ட்டுக்கு ஒரு நகல் மதுரை பிரதான ஆகம சபைக்கு கூடியசிக்கிரம் அனுப்பவேண்டியது.

11. ஷை சபைகளினுடைய சகல காரியங்களையும் வியாச்சிய நடவடிக்கைகளையும் காரியதரிசிமூலமாக நடத்தவேண்டியது. ஷை சபைகளினுடைய சகல தஸ்தாவேஜுகளும் அந்தந்த சபை பெயரை வைத்து அந்த சபை காரியதரிசி பெயரையும் அக்கிராஸனாதிபதி பெயரையும் பொக்கிஷதார் பெயரையும் சேர்த்து அவர்கள் பெயர் மூலமாக எழுதவேண்டியது.

12. மேலே கண்டிருக்கிற 3 முதல் 11 வரை பொதுவிதிகளுக்கு உள்பட்டு கிளை ஆகமசபைகளும் சம்பந்த ஆகமசபைகளும் நடந்துவர வேண்டியது. அவைகளினுடைய இதர காரியங்களுக்கு அந்தந்த சபைகள் தனித்தனியே நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொண்டு தனித்தனியே நிர்வாக சபையும் காரிய உத்தி

யோகஸ்தர்களையும் நியமித்துக் கொண்டு தனித்தனியே அவை அவைகளின் காரியங்களையும் நடத்திவரலாம்.

பிரதான சபையின் தனி விதிகள்,

13. மதுரை பிரதான தலைமை ஆகம சபையில் சேருகிறவர் ஒவ்வொரு தமிழ் வருஷத்திற்கு ரூ 1 செலுத்திவரவேண்டியது. நிர்வாக சபையாரின் சம்மதத்தின் பேரில் ரூ 1-க்குப்பதிலாக ரூ ½ சிலரிடம் வசூல் செய்யலாம்.

14. பிரதான ஆகமசபையின் காரியங்களை 11 அங்கத்தினர்களடங்கிய ஒரு நிர்வாக சபை நியமித்து அதன் மூலம் நடத்தவேண்டியது. இந்த நிர்வாகசபையில் முன் அறிக்கை கொடுத்து சபை கூடி சகலநிர்வாக காரியங்களையும் குறைந்தது 5 பேர் இருந்து நடத்திவரவேண்டியது. சபை கூடாமல் ஒரு காரியத்தை முடிவு செய்கிறதாயிருந்தால் அந்த விஷயத்தை எல்லா அங்கத்தினர்களுக்கும் தாக்கல் கொடுத்து குறைந்தது 7 பேர்கள் எழுத்து மூலமாக சம்மதித்தால் அந்தப்படிக்குத் தீர்மானம் செய்து நடத்தலாம்.

15. இரண்டு மாதத்திற்குள் முதலாவது பொது சபை கூட்டவேண்டும். பிற்பாடு 4 மாதத்திற்கு ஒரு தடவையாவது ஒரு பொது சபை கூட்டவேணும். பொது சபை கூட்டத்தில் குறைந்தது 25 பேர்களாவது ஆஜராகியிருக்கவேணும். ஒரு அங்கத்தினரை விலக்குகிறதாயிருந்தால் 100 பேர்களாவது முக்கால் வரிசை பேர்களாவது ஆஜராகியிருக்கவேணும்.

16. பிரதான ஆகம சபையினுடைய நிர்வாக சபையார் தங்களுக்குள்ள ஒருவரை அக்கிராஸனாதிபதியாகவும், ஒருவரை காரியதரிசியாகவும், வேண்டுமானால் ஒருவரை கிளை சபை காரியதரிசியாகவும், வேண்டுமானால் மற்றொருவரை உதவி காரியதரிசியாகவும், ஒருவரை பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியது.

17. பிரதான ஆகம சபையினுடைய பொதுசபையும் நிர்வாகசபையும் காரியதரிசி இஷ்டப்பட்டாலும் அல்லது முறையே 30 அங்கத்தினர்களும் 4 அங்கத்தினர்களும் கேட்டுக்கொண்டகாலத்திலும் கூடவேண்டியது.

18. மதுரை பிரதான ஆகமசபையில் அடியிற்கண்டிருக்கிறவர்கள் முதல் நிர்வாகசபையார்களாக யிருக்கவேண்டியது.

பிற்பாடு கூடுகிற முதலாவது பொதுக்கூட்டத்தில் மறுபடியும் நிர்வாகசபையார்களை தேர்ந்தெடுக்க வேண்டியது. அதுவரையில் இவர்களே வேலைபார்த்துவர வேண்டியது. ஒருதடவை பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒருவருஷம்வேலைபார்த்து பிற்பாடுஏற்படுகிற பொதுக்கூட்டத்தில்நியமனமாகிறவர்களிடம் வேலையை ஒப்புவிக்கவேண்டியது.

முதல் நிர்வாக சபை அங்கத்தினர்கள்.

1. மகா-ா-ா-ஸ்ரீ N. நடேசய்யரவர்கள் B. A. B. L, அட்வோகேட், மதுரை.
2. ,, R. கணபதிஅய்யரவர்கள் B. A. B. L, அட்வோகேட்! ஷை.
3. ,, K. இராமய்யங்கார் அவர்கள் B. A.B L, ஷை.
4. ,, T. S. ராமசுவாமிஅய்யங்காரவர்கள்B. A.B.L. ஷை ஷை
5. ,, K' S. சோமசுந்திரசாஸ்திரிகள் B A. B L., ஷை ஷை
6. காரைக்குடி திவான்பஹதூர் ஆ. வி. ப, ள. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்.
7. அமாரவத புதூர் (திரு) வ. யி. நா, க. ராம. அ, வெங்கடாஜலஞ்செட்டியாரவர்கள்.
8. தேவகோட்டை (திரு) சே. வு. மெய்யப்பசெட்டியாரவர்கள்.
9. கண்டனூர் (திரு)தெ.அரு.சித.ராமநாதஞ்செட்டியாரவர்கள்.
10. காரைக்குடி (திரு) முத்த, வெ. சொக்கலிங்கம் செட்டியார்
11. (திரு) சோ. அ. ராமசாமிநாயுடுஅவர்கள் மதுரை [அவர்கள்

19. அடியிற் கண்டிருக்கிறவர்களை ஷை "ஆகமபண்டித வித்வான் கோஷ்டி" யில் இப்பொழுது சேர்த்திக்கிறது.

1. மதுரை சாஸ்திர ரத்தின. பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள்.
2. மதுரை பிரும்மஸ்ரீ கல்யாணசுந்தர பட்டரவர்கள்.
3. மதுரை பண்டிதர் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள்
4. கண்டனூர் வித்வான் திரு. சாமிநாதபண்டிதரவர்கள்.

20. மேலே கண்டிருக்கிற நிபந்தனைகளை அனுசரித்து அவைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு அடியிற் கையொப்பம் வைத்திருக்கிற நாங்கள் ஒரு சபையாக சேர்ந்திருக்கிறோம்.

ஆலயப்பிரவேசம்.

ஆலயப்பிரவேசம் என்பது இப்போது எல்லோராலும்ஆலோசிக்கப்பட்டுவரும் விஷயமாக இருக்கிறது. அது கேவலம் சமூகத்தை மாத்திரம் அவலம்பித்த விஷயமா, அல்லது மதக் கோட்பாடுகளையும் அனுசரித்து யோசிக்கவேண்டியதா என்பதைக் கவனிக்கவேண்டும். ராஜீய காங்கிரஸ் கக்ஷியார் அதைக் கையாடி கிளர்ச்சிசெய்யும் முறையைப் பார்க்குங்கால், அவர்கள் அதை சமூக விஷயமாகவும்ராஜீயவிஷயமாகவும்மாத்திரம்நடத்துவதாகத் தான்ஏற்படுகிறது. விஷயத்திலுள்ள மதசம்பந்தத்தைஅவர்கள்பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. ஸ்வாபாவிகமாக மதத்தில் ஈடுபட்ட மனப்பான்மையோடுகூடிய மகாத்மா காந்தியானவர் ஏதோ ஒருகாரணத்தால் ராஜீயவிஷயங்களில்புகும்படிநேர்ந்ததே இவ்விதமான கிளர்ச்சிகளுக்குக் காரணமாகும். என்னுடைய சிற்றறிவுக்கெட்டினவரையில் மதவிஷயத்தில் அவர் ஈடுபடவேண்டியவரே அல்லாது அவர் தலைமை வகித்து நடத்துவதற்கு ராஜீய மேடை சரியானதென்று எனக்குத் தோற்றவில்லை. மத விஷயங்களில் ஈடுபட்டு அது சம்பந்தமான ஆராய்ச்சிகள் அவர் செய்திருக்கும் பக்ஷத்தில் இவ்விதமான கிளர்ச்சிகளுக்கு அவர் இடம் கொடுத்திருக்கமாட்டார் என்பது என் அபிப்பிராயம். ஸ்ரீகாந்தியின் குணநிசயங்களிலும் சக்தி விசேஷங்களிலும் எனக்குள்ள அந்தரங்க அபிப்பிராயத்திற்கு அளவேயில்லை. ஜனங்கள் பரம சுகத்தை அடையவேண்டுமென்ற அபிப்பிராயத்தில் இவ்விதமான பிரசாரங்களை நடத்திவருகிறார். ஆனால் தன்னுடைய மனப் பான்மை எல்லோருக்கும் இருக்குமென்று அவர் நினைப்பது தவறுதலேயாகும். தன்னுடையதான யாவற்றையும் அவர் சமூகத்திற்காகத் தியாகம் செய்திருக்கிறார். அவரைப் பின்பற்றுபவர்களில் எவ்வளவுபேர் அவரைப்போல் செய்யத் தயாராயிருக்கிறார்கள்? மிகவும் சொல்பமாகவே இருக்கும். மனீஷா பஞ்சகத்தில் சண்டாள வேஷதாரியான ஈச்வரனைப் பார்த்து ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் பதில்சொன்னகாலத்தில், புருஷனுக்கும் ஸ்திரீக்கும், கல்லுக்கும் பவுனுக்கும், வித்தியாசம் காணாத நிச்சலமான மனப்பான்மையுடையவர்களுக்குப் பிராமணன் இவன், சண்டாளன்

இவன், என்ற வித்தியாசம் கிடையாது என்று பதில் சொல்லியிருக்கிறார். பஞ்சமர்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவர்களில் எத்தனைபேர் தங்கள் சொத்துகளை அவர்களுக்கு பாகித்துக்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்? வித்தியாசங்களினாலேயே நிரம்பியிருக்கும் இந்த உலகத்தில், எல்லோரும் ஒன்றுதான் என்று நாம் சொன்னதால் அது சித்திக்கமுடியுமா? ஆசாரக்குறைவுடனிருக்கும் நமது சகோதர சகோதரிகளையும்பெண்சாதி பிள்ளைகளைக்கூட நமது பூஜாக்கிரஹத்தில் பிரவேசம் செய்ய நாம் இடம் கொடுப்பதில்லை. கோவில்களிலிருக்கும் தேவ பிம்பங்களை, அந்த நிர்குண நிராமய நிரஞ்சன பரப் பிரும்மமாகக்கொள்ள முடியுமா? அவைகள் மந்திர சக்தியால் ஸ்தாபனம் செய்யப்பட்டு, சுத்தாசார பெருக்காலும், பூஜா விசேஷத்தாலும் சான்னித்யத்தை அடையக்கூடிய பிம்பங்கள். அந்த பிம்பங்கள் எல்லோருக்கும் பொதுவென்றும், யாவரும் எவ்விதமாகவும் கையாடலாம் என்றும், எவ்விதம் சொல்லலாம்? சன்னிதியில் எவ்வளவுக்கெவ்வளவு ஸான்னித்தியமும் விருத்தியடையும். அவ்வித சான்னித்யத்தை உண்டுபண்ணுவதற்காகவே ஆகமசாஸ்திரங்கள் ஏற்பட்டு அதன், கோட்பாடுகளின்படி ஆலயங்கள் பரிபாலனம் செய்யப்படவேண்டியதிருக்கிறது. எவ்விதமாக ஒரு நியாயஸ்தலமானது சில சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுநடத்தப்படவேண்டியிருக்கிறதோ, அவ்விதமே ஆலயங்களும் ஆகம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே நடத்தப்படவேண்டியதாக இருக்கிறது. நியாயாதிபதி ஸ்தானத்தை வகிப்பவரைக்காட்டிலும் ஒரு வக்கீலானவர்பலவிஷயங்களில்மேல்பட்டவராக இருக்கலாம்; இருந்தாலும் அந்த வக்கீலானவர் நியாயாதிபதிக்காக ஏற்பட்ட ஸ்தானத்தில் போய் உட்காரமுடியுமா? அவ்விதம் அவர் செய்ய எத்தனப்பட்டால், "தாங்கள் பல விஷயங்களில் மேலாக இருக்கலாம். ஆனால் அவைகள் தாங்கள் அந்த ஸ்தானத்தை வகிப்பதற்குள்ள உரிமைகளைக் கொடுக்கமாட்டா. தங்களுக்குள்ளஇடத்திலிருந்தே தங்கள் காரியங்களைப் பார்க்கவேண்டு" மென்று சொல்லி இறக்கிவிடுவார்களே தவிர வேறல்ல, நியாயஸ்தலங்களிலும் சரி, ஆலயங்களிலும் சரி, பொது ஜனங்களுக்கு உரிமை உண்டென்றாலும், அந்தந்த ஸ்தலங்களுக்காக ஏற்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே; அந்த உரிமைகள் அனுஷ்டிக்கக்

கூடியதே தவிர வேறில்லை. ஆலயங்களிலுள்ள தெய்வத்தைப் பஞ்சமர்கள் தரிசனம் செய்யக்கூடாதென்று ஒருவரும் சொல்லவில்லை. ஆகமங்களில் உள்ள சட்டங்களை அனுஸரித்து அவர்கள் வெளியிலிருந்து தரிசனம் செய்ய வேண்டுமேயொழிய உள்ளே பிரவேசிக்கக்கூடாதென்பதுதான். அந்த சமூகத் தொகுதியில் உதித்த முக்கிய பக்தனான நந்தன் ஆலயத்தில் பிரவேசிக்கக்கூடாதென்பதையே தெரிவித்திருக்கிறார். அவருக்கிருந்த பக்தி அதிசயம் இருந்தால், அந்த சமூகத் தொகுதியைச் சேர்ந்த யாருக்குத்தான் நந்தியும் விலகாது. முனிசிபல் கட்டிடமானது பொது ஜனங்களுடைய பணத்தைக்கொண்டே கட்டப்பட்டிருக்கிறது. கௌன்சிலர்களும் பொதுஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் வரி செலுத்தும் ஒருவன் இது பொது ஸ்தலமென்று சொல்லி ஒரு கௌன்சிலருக்காக ஏற்பட்ட நாற்காலியில்போய் உட்கார்ந்தால் விடுவார்களா? அந்தந்த ஸ்தலங்களுக்காக ஏற்பட்ட சட்ட திட்டங்களுக்குட்பட்டுமாத்திரம் இவைகளைப் பொது ஸ்தலங்களென்று சொல்லலாம். வரி செலுத்தும் ஒருவனுக்கு நூறுவேலி நிலமிருக்கலாம். கௌன்சிலருக்கு ஒருவேலிகூட இல்லாமலிருக்கலாம். இருந்தாலும், அந்த வரிசெலுத்துபவனுக்குஉட்கார உரிமைகிடையாது. உலகத்தில்நாற்காலியில் எல்லாம் சாம்யமாக இருக்க முடியுமா? உருவத்திலோ, மற்றும் எந்த விதத்திலோ சாம்யமான இருவர்களையாவது இரண்டு வஸ்துக்களையாவது உலகத்தில் காணமுடியுமா? உலகம் எக்காலத்திலும் வித்தியாசத்தினுலேயே நிரம்பியிருக்கிறது. தனக்கு அவசியமாயிருக்கிறதென்று சொல்லி, நம்முடைய பையிலிருந்து ஒருவன் ரூபாயை எடுத்தால் எவ்வளவு சாம்யத்தை நாம் பாராட்ட முடியுமோ, அதேமாதிரியாகத்தான் ஆலயப்பிரவேச விஷயத்திலும் சித்தாந்தம் செய்வதிலும் நாம் பாராட்டவேண்டும். பிரபஞ்ச முழுமையும்ஈச்வர மயமாகக் காணக்கூடிய சக்தி வாய்ந்தவர்களே சாம்யத்தை அனுஷ்டிக்கமுடியுமே தவிர ஒரு ரூபாய் போனால் மணிக் கணக்காய் வருந்தப்படும் நாம் சாம்ய தர்மத்தை அவலம்பிப்பதென்றால் சாத்யமா? அதைக் கையாட சக்தியற்றவர்கள் நிறைந்த வீட்டில் மஹாத்மா காந்தியானவர் அக்னியை உற்பத்தி செய்கிறார். அது தகாத இடங்களில் பாவி, வீட்டை த்வம்சம் செய்யுமேயொழிய நல்ல பயனைத் தராது. பிராம்மணர்களாவது

இதர வர்ணத்தாராவது ஆலயங்களில் தாங்கள் போகக்கூடா தென்று சொல்லப்பட்ட இடங்களில் போக முயற்சிப்பதைக் காணோம். அர்ச்சகர்கள் தொடக்கூடியதென்று சொல்லப்படும் பிம்பத்தைத் தாங்களும் தொடும்படியான உரிமையைக் கேழ்க்க முன் வருவோர்களைக் காணோம். எல்லோரும் சேர்ந்து பஞ்சமர்களை ஆலயப்பிரவேசம் செய்துவைக்க எத்தனப்படுகிறார்கள். இந்த கிளர்ச்சியின் அழகை எவ்விதம் வர்ணிப்பது? இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், ஏதோ ராஜீய விஷயமான ஒரு கிளர்ச்சியில் தெய்வ பக்தியின் ஆதிக்யத்தையே முக்கிய காரணமாக அடைய வேண்டிய இந்த விஷயத்தைக் கொண்டு சேர்த்திருக்கிறார்கள். சாப்பிடப்போதுமான உணவின்றி பஞ்சமர்கள் சிரமப்பட்டிருக்கும் இந்தக்காலத்தில், சாம்யத்தை நன்றாகக் காட்டக்கூடிய இதர வழிகளையெல்லாம் விட்டு, பணச்செலவில்லாமல் சாம்யத்தை காட்டக்கூடிய இந்த விஷயத்தில் சிரமப்படுவது மிகவும் விசனிக்கத் தக்கது. அதிலும் சாம்யத்தை சித்திக்கச் செய்ய முயற்சிப்பவர்களில், பண்டித மதன்மோஹன் மாளவியாவைப்போன்ற சிலர் ஆலயப் பிரவேசம் மாத்திரம் போதுமென்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர் சமபந்தி போஜனமும் வேண்டுமென்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர் அதுவும் போதாது, கலந்து கல்யாணங்களும் செய்யவேண்டுமென்கிறார்கள். ஆனால் ராஜீய கிளர்சிக்காக நமது மத தர்மங்களைக் காட்டிக்கொடுப்பது ஆத்மஹத்தியாகவே முடியும். காந்தியானவர் எல்லோரும் கதர் அணியவேண்டும் என்று பிரசாரம் செய்தார். ஆனால் ஒரு கிராமத்திலாவது எல்லோரும் கதர் அணியும்வரையில் நான் பட்டினி கிடக்கப்போகிறேன் என்று ஒருவரும் முன்வரவில்லை. அதேமாதிரியாக பிள்ளைகள் பள்ளிக்கூடங்களையும் வக்கீல்கள் நியாய ஸ்தலங்களையும் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று பிரசாரம் செய்தார். அவ்விதம் எல்லோரும் செய்யும்வரையில் பட்டினி கிடக்கப்போவதாக ஒருவரும் முன் வரவில்லை. மதுவிலக்குப் பிரசாரத்திலும் ஆதித்திராவிடர்கள் பூராவாக மதுவை விலக்கும்வரையில் பட்டினி கிடப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் இந்த பிரசாரத்திலோ கோபுர வாசலில் பலர்கள் பட்டினிகிடக்க முன் வருகிறார்கள். ஏன்? இந்த விஷயத்தில் ஒருவருக்கும் பொருள் நஷ்டம் இல்லாததாலும், ஜனங்களுடைய மனது சுலபமாக இழுபடக்கூடியதாயி

ருப்பதாலும் தான். பஞ்சமர்கள் படிப்பில்லாதவர்களானதால் தங்களுடன் பந்தியில் ஒன்று இரண்டுதடவை சாப்பிடுவதால், இந்த பிரமுகர்கள் தங்களை சாம்யமாக செய்து கொண்டுவிட்டார்களென்று நம்புகிறார்கள். இவ்விதம் சாரமற்ற சாம்யம் எவ்வளவு நிலைத்து நிற்கும்? இந்த பிரசாரங்களால் நமது ஸனாதன தர்மத்திற்கு ஹானி ஏற்படுமோவென்ற பயத்தால் நான் சொல்லவா வில்லை. ஸனாதன தர்மம் தானே எப்போதும் நிற்கும். ஆனால் நம்முடைய ஸனாதன தர்மங்களை விட்டுக்கொடுத்து நம்முடைய ஸ்வா ராஜ்யத்திற்காகப் பாடுபடுவது மிகவும் தப்பான வழியென்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்முடைய ஸனாதன தர்மத்திற்காக பாடுபடும் பிரமுகர்களும், ஆகமங்கள் இடங்கொடுக்கவில்லை, சாஸ்திரத்திற்கு விரோதம், என்று சொல்லுவதோடு நிற்காமல் இரண்டு கக்ஷிக்காரர்களும் நிறைந்திருக்கக்கூடிய சபையைக் கூட்டி, ஆகம சாஸ்திர வசனங்களை சாந்தமாக இருந்து விசாரம் செய்து, நம்முடைய கக்ஷியின் விஷயத்தை அவர்கள் நம்பும்படி செய்ய முயற்சிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகம சாஸ்திரங்களில் நம்பிக்கையில்லையென்று சொல்லக்கூடியவர்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

நாகப்பட்டணம்,
16—11—32.

N. சாம்பசிவ அய்யர்,
B.A., B.L.,

நாம் செய்யவேண்டியதென்ன.

நம்மதத்தை நாசம் செய்ய இப்போது காங்கிரஸ்காரர்கள் மட்டிலுமல்ல. மேற்றிசைப் படிப்பை அடைந்து அந்த நாகரீகத்தில் மிகவும் முழுகி நம் வேத சாஸ்திர மத வாஸனையற்ற யாவருமே ஒன்று திறண்டுவிட்டார்கள்' இதுகாறும் நம் மதத்தை அழிக்கப் பலபெயர்களுடன் பல பிரிவுகள் போல் ஸபைப்பெயரை வைத்துக் கொண்டிருந்த யாவரும் ஸனாதன மதத்தை அழிக்கும் நோக்கம் என்றுமட்டிலும் லக்ஷ்ய முள்ளவர்களாயிருந்தார்கள். நம் ஸனாதன தர்மத்திற்கு அவ்விதம் செல்வாக்குள்ள ஸபை ஒன்று கிடையாது, இருந்தாலும் அதில் அபிமானமுள்ளவருக்குப் பிரஸித்தியே கிடையாது. நம் மதத்தில் அபி

மாணிகள் ஏராளமாயிருப்பினும் நாம் இல்லாதது போல்தான் என்பதைப் பலதடவை கூறிவருகிறேன். நிற்க.

1—11—32-ல் சென்னை சண்டாளர்களின் ஆலயப்பிரவேச விஷயமாய்க் கொண்டுவந்த பிரேரணையை ஸபை அங்கத்தினர்கள் யாவரும் பூர்ணமாய் ஆதரித்ததாயும் ஒருவர் மட்டிலும் ஏதோ அதற்கு விரோதமாய்ப் பேசியது போல் இருந்ததாயும் கடைசியில் பிரேரணை கொண்டுவந்தவர் அதற்கு அர்த்தம் அதல்ல. இது தான் என்று அலங்கரித்ததாயும் அதன் பிறகு ஓட் கணக்கு செய்ததில் எதிர் ஓட்டே இல்லாமல் ஸாதகமாய் 56 ஓட் கிடைத்ததாயும் பத்திரிகை புகழ்கிறது. கவர்ண்மெண்ட் நடுநிலைமை வகித்து விட்டதாம். இது எதற்காகவோ, ஒரு சமயம் மதவிஷயத்தில் நடுநிலமை வகிப்பதென்ற வாக்கைக் காப்பாற்றும் அர்த்தம் போலிருக்கிறது. இவ்விதம் சட்ட ஸபையில் பாஸ் செய்துவிட்டால் என்ன ஆய்விடுமோ வென்று பயப்படுகிறார்கள். அதற்கு முன் நாம் இதைச் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. சட்டஸபையில் மத விஷயங்களைக் கொண்டுவாவே கூடாதென்பதையே பலப்படுத்தவேண்டும். அதற்கு முதற் காரணம் இது.

நாங்கள் ஸநாதன தர்மிகள். எங்கள் தர்மங்களை எடுத்துரைக்கும் வேத சாஸ்திரங்கள் ஒரு போதும் மறக்கக்கூடியதல்ல. எங்களது அனாதியான அனுஷ்டானங்களைப் பார்த்துத் தான் மகமதியர்கள், கிரிஸ்தவர்கள் முதலியவர்களும் தங்கள் வேதங்களுக்கு மதிப்பு வைத்து நடக்கிறார்களென்று நினைக்கிறோம். அத்தகைய விசாலமான நோக்கமுள்ள, எங்கள் வேதசாஸ்திரங்களை சூறையாடி எங்கள் மதத்தின் உருவை குலைக்க எங்கள் மதஸ்தர்களென்று பெயர் வைத்துக் கொண்டு பிர்மஸமாஜிகளென்றும் ஆரிய ஸமாஜிகளென்றும் சில வகுப்பார்கள் கிளம்பியிருக்கிறார்கள். இவர்களால் பல வருடங்களாய்ச் செய்யப்படும் கெடுதல்களை நாங்கள் அசட்டை செய்திருந்தால் இப்போது சட்டமூலாய் தண்டனைக்குட்படுத்தி ஸநாதன தர்மத்தை அழித்துவிடலாமென்று கொஞ்ச காலமாய் ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது சட்டஸபையில் உள்ளோரில் ஒருவராவது ஸநாதன ஹிந்துவே இல்லை. ஹிந்துக்களென்ற பெயர்பெற்ற சீர்திருத்தக்காரர்கள் தான் இருக்கிறார்கள்' இவர்களுக்கு ஹிந்து

மதமென்பதே தெரியாது. தற்காலம் ஆரம்பித்திருக்கிற காரியத்திற்கு காந்தி தான் குரு, இவர் ஹிந்துமதமென்பதற்குப் பொருளே அறியாதவர். இவர் பைபிள் படித்தவர். விசேஷமான பற் இவருக்குஇதில்தான் உண்டென்பதை முன்னமேயே கூறியிருக்கிறேன். இவருக்கு முக்கிய சிஷ்யரான இராஜகோபாலாசார்யர் குருவை ஒத்தவர் தான். குருவுக்கு மிஞ்சிய சீடனுப் ஓடி மேலும் சிறிப்போவார் போலிருக்கிறது. இப்போது சுப்பராயன் பேசிய ஸபையில் எங்களினத்தார் யாராவதிருந்தால் அதைத்தடுத்துப் பேசியிருகக மாட்டாரா? ஆனால்ஒருவர் பேசினரே என்றால் அது தான் அங்கு நடந்த சாணக்கியதந்திர நாடகம். அங்கு இருந்தவர்களெல்லாம் லௌகிகயுக்தி தெரிந்தவர்களாகையால் இதற்கு எதிர்வாதம் செய்பவரில்லாவிடில் சட்டத்திற்கு குறைவு ஏற்படுமோ என்று நினைத்து ஒருவரை எதிரிபோல பேசச் செய்து அதற்கு ஸமாதானம் செய்வது போலும்செய்து காரியத்தை முடித்தார்கள், இதற்காக இவரையும் சென்னை சட்டசபையையும் ஆசி கூறி பம்பாயிலிருந்து ஒருவர் தந்தி கொடுத்திருக்கிறார். எல்லாமிருக்கட்டும் கடைசியாய் நான் ஒன்று சொல்லுகிறேன்.

சடட ஸபையில் கொண்டு வந்து அவர்கள் சட்டம் செய்து கொள்ளட்டும். நாம் உள்ள நிலமையை மட்டிலும் எடுத்துக் கூற வேண்டியதுண்டு. அது கூறினும் அச்சபை நம்முடையதல்லவென்று முன்னரே கூறியபடி அதில் அவர்களுக்குத் தான் வெற்றி கிடைக்கும். அதனால் அவர்கள் எண்ணின காரியம் நிறைவேறுதென்று அவர்களுக்கும் நன்கு விளங்கும்படி நாம் அப்போது செய்து கொள்ளலாம். அதைப்பற்றிய விபரத்தை இப்போதே வெளிப்படையாய்க் கூறுவது அலௌகிகத்தில் முடியுமோவென்று தோன்றுவதால் அதை அடுத்துத் தெரிவிக்கிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

(காந்திஜீ கேட்பது சரியா?)

“இப்பாரதகண்டத்தின் மூலைமுடுக்குகளெல்லாம் என்போல ஸஞ்சரித்தபேர் மற்றொருவர் இல்லை லக்ஷக் கணக்கான ஜனங்கள்முன் பெரும் பெரும் கூட்டங்களில் பேசியிருக்கிறேன். என் சொந்த நடவடிக்கைகளில் நான் ஜாதிவித்தியாஸம் பாராதவன், என்று எல்லாரும் அறிவார்கள். மிதமிஞ்சின மொழிகளில், எத்தனையோதரம், நான் தீண்டாமையை, பாபமென்றும்,பாதகமென்றும், திட்டிக் கொட்டியிருக்கிறேன். கேட்டிருந்த ஜனங்களில் ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. அப்போது அவ்விதம் அவர்கள் ஒப்பினதை, இப்போது அவர்கள் நடத்தித் தரவேண்டும். அவர்கள் உள்ளத்தில் தைக்கவே, நான் முன் பட்டினி கிடந்தேன். இனியும் கிடக்கநேரிடும்,” என்று காந்திஜீ சொல்லியிருக்கிறார்.

காந்திஜி சென்ற மார்ச்சு மீ த்தில் பட்டினியைப்பற்றி எச்சரிக்கைக் கடிதம் எழுதினார். அதற்குக் கெடுவைத்து ஆகஸ்டு மீ த்தில் மறுபடி எழுதினார்; பட்டினி தொடங்குமுன் மற்றொருதரம் எழுதினார். ஒரு கடிதத்திலாவது, பெருங் கூட்டங்களில் தன்னை ஆமோதித்த ஜனங்களின் புத்தியைத் திருத்தத், தான் பட்டினிகிடக்கப்போவதாய் சொல்லவில்லை. வேறு எந்த ஆதாரத்தால் இப்போது நவம்பர்மீ 5உ௰ அறிக்கையில் காந்திஜி அவ்விதம் சொல்லுகிறரென்று விளங்கவில்லை.

காந்திஜியே! பாரதநாட்டுச் சரித்திரத்தின் சென்ற பதினைந்து வருஷத்து சம்பவங்களைச் சற்று நோக்குவோம்.

“கிலாபத் விஷயத்தில் மகம்மதியரின் உயிர்நிலை; மகம்மதியர் மதத்தை, இந்துக்களே! தாங்குங்கள்” என்று மஹா யுத்தம் முடிந்தபின் கட்டளையிட்டீர். இந்து முஸ்லீம் ஒத்துமையைப் பற்றி அனவரதம் போதித்தீர். இந்துக்கள் அனைவரும் ஈடுபட்டு நடந்தார்கள். பின்பு, தங்கள் அருமைத் தோழர்கள், மகமத் அலியும், ஷௌகத் அலியும், உம்மை இடையிலே கைவிட்டார். மகம்மதியர் சமூகம் மேல்மேல் வலுத்தது; இந்துக்களின் நிலைமை வரவரத் தளர்ந்தது. எல்லாம் பார்த்தும், தெரிந்தும், நீரே தஞ்சமென்றிருந்தோம்,

ஸ்வராஜ்யம் வரவேண்டி, "பட்டங்களை விடவேண்டும்; ஸ்கூல்களையும், கோர்ட்டுகளையும் பஹிஷ்கரிக்கவேண்டும். சட்ட சபைகளை நாடவேகூடாது," என்று கடுமையான கட்டளையிட்டீர். அதைக் கைதட்டி, வாய்மெச்சி, கேட்டிருந்தபேர் கோடி. ஆனால், காரியத்தில் நிஜமாக நடத்தினோர் சிலரே. அப்போது வேத மொழிகள்போல உம்வார்த்தைகள் வழங்கின. இப்போது, அவை களைக் கனவிலும் நினைப்பவர் துர்லபம். ஸ்கூல்களும் கோர்ட்டு களும் முழக்கமாய் நடக்கின்றன. சட்டசபைகளில் உம்முடைய சிஷ்யர்கள் உற்சாகமாய்ப் புகுந்து, உங்கள் பேரைச்சொல்லி, கோடிக்கணக்கான ஜனங்களின்மனம்நோக, சாரதாச் சட்டத்தை நிறைவேற்றிவைத்தனர். தீண்டாமை விஷயம் நிற்க, மற்ற விஷ யங்களில் தாம் சொன்னபிரகாரமே நடந்தேறிவிட்டதா? தவிர, இப்போது கதரையே கட்டுவோர் எத்தனை? எப்போதும் கட்டா மலிருந்தபேர் எத்தனை? முன்னேகட்டி, பிறகுவிட்டபேர் எத்தனை? பட்டினிகிடப்பதற்கு, வியாஜங்கள் பல இருக்க, தீண்டாமை விஷயத்தில் ஏன் இந்தப் பிடிவாதம்?

பிரிட்டிஷ்நாட்டுச் சரக்கென்று குறிப்பிட்டு பஹிஷ்கரித் ததால், அது த்ரோகத்தையே காட்டும்; பிறநாட்டுச்சரக்கென்று பொதுவாக விலக்கிவிட்டால், த்ரோகம் அதில் சேராது, என்று தத்வம் உபதேசித்தீர். பிறகு, பிரிட்டிஷ் தேசத் துணிகளைத் தீயிலே போட்டாலும், அவை கொழுந்துவிட்டெரிவதைப் பார்த்து மனம் குளிர்ந்தாலும், அதில் கொஞ்சமும் க்ரோதமில்லை, என்று உபதேசித்தீர். உமது வேதாந்தம் பூராவாய் அறியாத பாமரர்கள் தெரிந்ததுபோல் பாவனையாய்ப் பொறுமையுடன் கேட்டிருந்தார்.

சாகக்கிடக்கும் பசுங்கன்றைச் சாகுமுன், அதன் கஷ்டத் தைத் தீர்த்துவிட சில நிமிஷம் முன்னமே, சுட்டுவிட்டாலும் அது தர்மமென்றெழுதினீர். உமக்கும் அக் கன்றுக்கும், ஈசன் உயிர் அளித்திருக்க, அது விதிவசமாய் விலகுமுன் தானாக மாய்த்து விடல், பாபமே. ஆனாலும் தவறாய்த் தாம் சொன்னதை மௌன மாய்க் கேட்டிருந்தோம்.

கோவிலில் நீர் சிரத்தையுடன் ஓரிடமும் நுழையாமல், "வேசி யரின் இடம்போலத் தென்னாட்டுக் கோவில்" என வாயாரக் கூட்

டத்தில் தாம் சொன்ன ஸாஹஸத்தை, ஆத்திரமாய் எதிர்க்காமல் அடக்கத்துடன் கேட்டிருந்தோர்.

"பக்ரீத்"தில் பசுக்களைக் கொல்வதும் எங்கள் மதம்," என்று இஸ்லாமானவரின் ஹ்ருதயத்தை உணர்ந்து தாம், "அவர் கொள்கை அப்படி; நம் மனது தபித்தாலும், அவரும் நம் ஸகோதரர்கள்," என்றெண்ணி நயத்துடன், பொறுத்தலே நீதியென சாந்தமாய்க் கூறினீர். அந்நிய மதஸ்தரிடம் தமக்கு அவ்வளவுண்டு. ஆனால் வேத சாஸ்திரங்களை நம்பும் உம் இனத்தாரிடம், கடுமையும் கண்டிப்பும் காண்பித்துத், தீண்டாமை ஒழியாவிட்டால், உபவாசத்தால் உயிர் துறப்பேன், என்று இப்போது சொல்லுகிறீர். இதன் நியாயம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை.

இதற்கெல்லாம் காரணம் தாம் எளிதிலே உணரலாம். பெரியாரின் பேச்சை மரியாதையாய்க் கேட்பதே இந்துக்களின் பழக்கம். தெரியாதவன் சொன்னாலும், அதைக்கூட, அப்போதே எதிர்ப்பதெனும் பிடிவாதம் எங்களுக்கில்லை. தவிரவும் ஸ்வராஜ்யப் போராட்டம் மும்முரமாய் நடக்கும்போது, பிரிவுகளைப் பாராட்டச் சமயமிது அல்லவென்றும், யுத்தத்தின் மத்தியில் தளகர்த்தரைத் தாக்குதல் பொருந்தாத செய்கையென்றும் எல்லாரும் இருந்தார்கள், தாங்கள் ராஜீயத் தலைவரென்றே பொது ஜனங்கள் மதித்திருந்தார். இந்துமதச் சீர்திருத்தம் ஆதிமுதல் தம் நோக்கமென்று யாவருமறிந்திருந்தால், சென்ற பதினைந்து வருஷமாய் இந்தியாவின் சரித்திரம் வேறு வழி சென்றிருக்கும்.

S. M.

ஸ்ரீவாமன புராண அரங்கேற்றுப்படி மஹோத்ஸவம்.

சென்னை அமரகலாவிலாஸினி பதினெண்புராணப் பிரசுரத்தில் மூன்றாவதாக வெளியிட்டிருக்கிற ஸ்ரீவாமனபுராணம் ஷ்டிஸபையின் ஆசிரியர், ப்ரம்மஸ்ரீ ஸாஹித்ய வாங்முகபூஷணம் மஹாமஹோபதேசக ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவ சர்மா அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. 13—11—32 பானுவாரம்

ஆதிபகவத்பாதாளுக்கு வேதோக்த அபிஷேக அர்ச்சனை முதலியவைகளைச் செய்து அவர்கள் ஸந்நிதானத்தில் புத்தகங்கள்வைக்கப்பட்டன. ஆசிரியர் அதன் விருத்தாந்தத்தை விளக்கிக் கூறினார். ஆஸ்திகர்களின் சார்பாக பல பெரியார் இத்திருக்கைங்கர்யத்தைச் செய்துவரும் சபையையும் ஆமோதித்து சுருக்கமாக இல்லாமல் பூர்ண மொழிபெயர்ப்பாகவே பிரசுரிக்கும்படி வேண்டினர். ஸபையின் காரியதர்சி இதுபோன்ற கைங்கர்யத்திற்கு ஆதரவு மிகக்குறைவாக இருக்கிறதென்றும், மதாபிமானத்தையே கொண்டு நாங்கள் ஆரம்பித்தமையால் இச்சமயம் இவ்வளவுதான் செய்ய முடிந்ததென்றும், எந்த ஆஸ்திகரேனும் பிரசுரிப்பதாக ஏற்றுக்கொண்டு உறுதி கூறினால் பூர்ணமாக எழுதிக்கொடுக்க ஆசிரியர் ஸித்தமாய் இருக்கிறார் என்றும், வந்தவர்களுக்கு வந்தனோபசாரமும் கூறினார். ஆஸ்திகரின் பிரதிநிதியாக ஓர் கனவான் இப்புத்தகத்தை எளிய நடையில் எழுதி ஸ்வல்ப(1)ஆறு அணா விலையில் வெளியிட்டதற்காக ஸபைக்கும் ஆசிரியருக்கும் வந்தனம் கூறினர். எல்லோருக்கும் சந்தனபுஷ்பம் தாம்பூலம் வழங்கப்பட்டு சபை கலைந்தது.

A. வீரராகவன்.

ஹைதராபாத்தில் தென்னிந்திய ஸங்கீதம்.

ஆங்கிரஸ௵ ஆவணி௴ 10௳ (25—2—32) வியாழக்கிழமை ஸ்ரீஜயந்தி அன்றையதினம் இவ்வூரில் உள்ள ஸங்கீத அபிமானிகள் சிலர் கூடி இவ்வூர் வரும் ஸங்கீத வித்வான்களை ஆதரிக்கவேண்டி, ஒரு ஸங்கீத ஸபை இருக்கவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, ஸ்ரீகிருஷ்ணகான ஸபா என்றஸபையை நடத்திவருகிறார்கள். வித்வான்களை ஆதரிப்பதுமுக்கிய தர்மம். இந்த ஸபா என்றும் நீடூழிவாழ பகவான் அருள் புரிவாராக. இதுபோல் ஹைதராபாத்தில் ப்ராம்மண்யம் கெடாமல் இருக்க ப்ராமண மஹாஸபை ஏற்படுத்தவேண்டிய பிரயத்னம் நடந்து வருகிறது. கூடியசீக்கிரம் அதுவும் ஏற்படவேண்டுமென்று பகவானை என்றும் தியானிக்கிறேன்.

இப்படிக்கு,

V. S. வேங்கட்டராம சாஸதிரி.

வாரவிருத்தாந்தம்.

வருக! வருக! 5வ பம்பாய் வர்ணாச்ரம ஸ்வராஜ்யசங்கத்தார் தர்மப்ரசாரம்செய்ய ஓர் வித்வத்கோஷ்டியைத் தக்ஷிணதேசத்திற் கனுப்ப ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவர்கள் குருவாயூர் ஆலய தர்மகர்த்தாவுக்கு கடிதமெழுதி ஆலயத்தை அசுத்தமாகா காத ஏற்பாடு செய்தனர். இவர்களுக்கு வேண்டிய உதவிசெய்ய வல்லபமடாதிபதி ஒருவர் முன்வந்துளார். இவர்களது செயலைக் கண்டேனும் பண்டிதரும் ஆஸ்திகரும் நிறைந்ததென்னாடு விழித் துக்கொள்ளுமா, வரும் பிரசாரகர்களுக்கு நல்வரவு கூறுவாம்.

ஸ்ரீரங்கமாஸ்திகர்வாழி. 6வ ஷெயூரில் ஓர் ஸபை கூடி அதர்மத்தைக் கண்டித்து தர்மத்தைத் தீர்மானித்தது. தர்ம பிரசாரம் செய்ய ஓர் கமிட்டியை நியமித்ததைக்கண்டு ஸந்தோஷிக் கிறோம். மற்ற ஆலயமுள்ள ஊரார் என் செய்கின்றனர்? மூனைந்து நிற்பரா?

போடாத மஹராஜி. 7வ கும்பகோணத்தில் 25-ப்பல தலைவர் கையெழுத்திட்டு ஓர் ஸபை கூட்டினர். ராவ்பஹதூர். முத் துக்குமாசெட்டியார் தலைமை வஹித்து அழகாகப் பேசினர். பல அரிய தீர்மானங்கள் செய்தனர். பற்பலப்ரமுகர்கள் பேசினார்கள். இங்ஙனம் தர்ம கார்யத்தில் முயற்சிசெய்வோர் ஒரு சிலரே. அவர்களது பெயர் ஆஸ்திக உலகமறியாததல்ல. அன்ன மிடாதவனைப் பட்டணத்தார் மஹராஜி என்று கூறி வழக்கமாக அன்னமிட்டவரை வைதாராம். அதுபோல் தூங்குமாஸ்திகர் கிடக்கட்டும். விழித்து வேலைசெய்யும் தர்ம வீரர்களை நாம் வெய்யாது வாழ்த்தி வற்புறுத்துவோம்.

மாதுகர விருத்தி 8வ தஞ்சையில் நடக்கும் ஆர்யமத பாடசாலையின் அதிகாரிகள் தீபாவளியன்று ஷெ பாடசாலை செலவிற்கு உண்டிமூலம் வசூல் செய்ததாகவும் 152ரூ. வசூலான தாகவுமறிவிக்கின்றனர். தர்மத்தின் மேன்மையை உணர்ந்து தானே தனுபகாரம் செய்யும்தார்மிகர் வெகு சிலரே! எவரையும் அதிகமாக ஹிம்ஸிக்காமல் புஷ்பங்களைக் கசக்காமல் வண்டு தேனை எடுப்பதுபோல் மாதுகாத்தை அவலம்பித்து தர்மம் செய்யும் இவர்களைப் போற்றுகிறோம்.

இவரே தர்மகர்த்தா. 9௨ குருவாயூர் கோவில் தர்மகர்த்தா வான ஜாமரின் என்பார் தற்காலவலையில் சிக்காது தர்மத்தை ஒழுங்காகக் காக்கிறார், தனக்குப் பக்கபலமாக பலரது அபிப்ராயத்தை அறிய தக்கமுயற்சி செய்கிறார். மஹாமஹோபாத்யாய கல்கத்தா அநந்தகிருஷ்ண சாஸ்திரிகளை அழைத்திருக்கிறார், இவரது மதாபிமானத்தைப் போற்றாமலிருக்க முடியாது. கலியின் கோலாஹலத்திற்கு எல்லோருமீடுபட இவர் தனித்து நின்று எதிர்ப்பது ஆச்சரியமே. பக்தர் வாழ்க.

முதலியார் முன்வருகிறார் 9௨ மன்னார்குடியில் விவாகரத்து மசோதாவையும் சண்டாளர் ஆலயப்ரவேசத்தையும் தடுக்க ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. அதுகாலை ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ முதலியார் தலைமை பூண்டு இவ்வனியாய செயலை அழுத்தமாகக் கண்டித்தார். மிக விரைவாக சீர்திருத்தக்காரர் தர்மத்தைக் குலைப்பதை எங்ஙனம் ஸஹிப்பதென மனந்தாளாது முன்வந்து பேசுகிறார். இவரைப்போல் மற்றும் பல பக்தர்களில்லாமலில்லை. அவர்களை ஒன்றாகத் திரட்டி முனனிறுத்தி வேலை செய்யும் தலைவரே இல்லை எனலாம்.

மானஸிகபலாத்காரமாகாது 19௨ ஸ்ரீகாந்தி பலாத்காரமாக வைதிகரது ஸித்தாந்தத்தைக் கெடுப்பதைக் கண்டித்து பெங்களூரிலிருந்து ஸ்ரீமைகேல் என்ற இந்திய கிருஸ்தவர் ஓர்கடிதமெழுதினார். தீண்டாமை தப்பானாலும் தீவ்ரமாக பலகோடி வைதிகரது மனதைப் புண்படுத்துவது தப்பு. உபவாசமும் ஓர் வகை பலாத்காரமேயாகும். காந்தியின் மனது நல்வழிக்கு வந்து இந்த துராக்ரஹத்தை விடும் வரையில் தான் பட்டினி கிடந்திறக்கத் தீர்மானித்திருப்பதாக கூறுகிறார். என்னே பகவான் செயல்! இது எப்படி முடியுமோ ? ஆஸ்திகருக்கு மைக்கேல் ஓர் சவுக்கடி கொடுத்தார். இனியேனும் விழிப்பரோ ?

அநாகரிகமுறையைக கண்டிக்கிறோம்.12௨ தூத்துக்குடியில் ஓர் பெரிய ஆஸ்திகஸபை கூடியது, அதில் கலந்தவரெல்லோரும் அப்ராமணரே ஆவர். அதில் அங்கு சென்று நாஸ்திக ப்ரசாரத்தை சுயமரியாதை என்றபெயரால் செய்துவரும் சிலரது தீர்மானங்கள் கண்டிக்கப்பட்டன. இது ஈசனது திருவிளையாடலேயாகும். ஆஸ்திகர் விழித்தெழுந்து இங்ஙனம் ப்ரசாரம் செய்தாலன்றி தர்மத்தைக் காப்பது அரிது. வே. ஸோமதேவ சர்மா.

ஓர் திருத்தம்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராபகவத் பாதாள் சென்னைக்கு விஜயம் செய்ததை முன்னிட்டு ஸ்ரீபகவத் பாத பாதார விந்தங்களில் எங்களுக்குள்ள பக்தியைக் காட்ட ஸ்ரீசங்கரோபதேச ரத்னம், ஸ்ரீபத்மபுராணம், ஸ்ரீமார்க்கண்டேய புராணம் ஆகிய இம்மூன்று புத்தகங்களை மாத்திரம் ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு மட்டிலும் 30—11—32 வரையில் பாதி விலைக்கு கொடுப்பதாக எழுதியிருந்தோம். அதன்கீழ் குறிப்பில் தற்கால விலை என்பதற்கு பதிலாக தத்கால விலை என்று பிரசுரமாய்விட்டது. அதைக் கண்டு பாதியிலும் பாதி விலைக்கு பலர் கேட்கின்றனர். மதப்ப்ரசாரத்திற்காகவே புத்தகத்திற்கு ஆன விலையை மாத்திரம் முதல்விலையாக வைத்தோம். வேறு வகையில் ஸ்ரீமகாசன்னிதானத்திற்கு கைங்கர்யம் செய்யமுடியாமல் ஆர்யதர்மம் சந்தாதாரருக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்று பாதிவிலை வைத்தோம். முழு விலை முறையே ரூ 2, 0—12—0 0—6—0 பாதிவிலை ரூ. 1. 6 அணா 3 அணா.

அமாகலா விலாஸினீ பிரசுரதாரர்கள்,

154, தம்புசெட்டித்தெரு, சென்னை.

என்று எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ல. ராமசாஸ்திரி.

உ

சந்தாநேயர்களுக்கு அறிவுப்பு.

நமது ஆர்யதர்மத்துக்குச் சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்காக கமிஷன் ஏஜண்டுகள் தேவை. 10 சந்தாதாரர்களை சேர்த்து கொடுப்பவருக்கு ஒரு சந்தாதாரர் தொகை ரூ. 3 கமிஷன் கொடுக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் நமக்கு அறிவிக்கவும்.

மானேஜர்,

ஆர்யதர்மம் ஆபீஸ்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம்.

கும்பகோணம்.